# ஏப்ரல் – 12 – வெள்ளி

## தூய ஜீலியஸ்

## ஆண்டவர் என் கற்பாறை: என் கோட்டை என் மீட்பர்:

## திபா. 18:2

### முதல் வாசகம் : ஏரேமியா 20 : 10 – 13

அந்நாட்களில் ஏரேமியா கூறியது : "சுற்றிலும் ஒரே திகில்!" என்று பலரும் பேசிக் கொள்கின்றார்கள்" பழிசுமத்துங்கள் வாருங்கள், அவன்மேல் பழி சுமத்துவோம்" என்கிறார்கள். என் நண்பர்கள்கூட என் வீழ்ச்சிக்காகக் காத்திருக்கிறார்கள் "ஒருவேளை அவன் மயங்கி விடுவான் நாம் அவன்மேல் வெற்றிகொண்டு அவனைப் பழி தீர்த்துக் கொள்ளலாம்" என்கிறார்கள். ஆனால், ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப்போல என்னோடு இருக்கிறார். எனவே என்னைத் துன்புறுத்துவோர் இடறிவிழுவர். அவர்கள் வெற்றிகொள்ள மாட்டார்கள். அவர்கள் விவேகத்தோடு செயல்படவில்லை. அவர்களின் அவமானம் என்றும் நிலைத்திருக்கும் அது மறக்கப் படாது. படைகளின் ஆண்டவரே! நேர்மையாளரை சோதித்தறிபவரும் உள்ளுணர்வுகளையும் இதயச் சிந்தனை களையும் அறிபவரும் நீரே் நீர் என் எதிரிகளைப் பழி வாங்குவதை நான் காணவேண்டும் ஏனெனில், என்வழக்கை உம்மிடம் எடுத்துரைத்துள்ளேன். ஆண்டவருக்குப் புகழ்பாடுங்கள் அவரைப் புகழ்ந்தேத்துங்கள் ஏனெனில், அவர் வறியோரின் உயிரைத் தீயோரின் பிடியினின்று விடுவித்தார்.

**பதில்பாடல் :** என் நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம்
மன்றாடினேன்.

### நற்செய்தி : யோவான் 10 : 31 - 42

அக்காலத்தில் இயேசுவின் மேல் எறிய யூதர்கள், மீண்டும் கற்களை எடுத்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, "தந்தையின் சொற்படி பல நற்செயல்களை உங்கள்முன் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள் எச்செயலுக்காக என்மேல் கல்லெறியப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார். யூதர்கள் மறுமொழியாக, "நற்செயல்களுக்காக அல்ல, இறைவனைப் பழித்துரைத்ததற்காகவே உன்மேல் கல்லெறிகிறோம். ஏனெனில் மனிதானாகிய நீ உன்னையே கடவுளாக்கிக் கொள்கிறாய்" என்றார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, ""நீங்கள் தெய்வங்கள் என நான் கூறினேன்" என்று உங்கள் மறைநூலில் எழுதியுள்ளது அல்லவா? கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக் கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள். மறைநூல் வாக்கு என்றும் அழியாது. அப்படியானால் தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை "இறை மகன்" என்று சொல்லிக் கொண்டதற்காக "இறைவனைப் பழித்துரைக்கிறாய்" என நீங்கள் எப்படிச் சொல்லலாம்? நான் என் தந்தைக்குரிய செயல்களைச் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்ப வேண்டாம். ஆனால் நான் அவற்றைச் செய்தால், என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள் அதன்மூலம் தந்தை என்னுள்ளும் நான் அவருள்ளும் இருப்பதை அறிந்துணர்வீர்கள்" என்றார். இதைக் கேட்டு அவர்கள் அவரை மீண்டும் பிடிக்க முயன்றார்கள். ஆனால் அவர்கள் கையில் அகப்படாமல் அவர் அங்கிருந்து சென்றார். யோர்தானுக்கு அப்பால் யோவான் முதலில் திருமுழுக்குக் கொடுத்துவந்த இடத்திற்கு இயேசு மீண்டும் சென்று அங்கு தங்கினார். பலர் அவரிடம் வந்தனர். அவர்கள், "யோவான் அரும் அடையாளம் எதையும் செய்யவில்லை ஆனால் அவர் இவரைப்பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையாயிற்று" எனப் பேசிக் கொண்டனர். அங்கே பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம்:** யோவான் நற்செய்தியில் இயேசு தமக்கும் தம் தந்தைக்கும் இடையே உள்ள உறவு பற்றிப் பல இடங்களில் விளக்கிக் கூறுகிறார். இயேசு கடவுளைத் தம் தந்தை என அழைத்தார். தந்தை-மகன் உறவை நாம் பெற்றோர்-பிள்ளை உறவாகப் புரிந்துகொள்கின்றோம். ஆனால் இயேசு கடவுளைத் தம் தந்தை என அழைப்பது மனித உறவுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இயேசு கடவுளின் மகன் என்னும் முறையில் காலத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் ""தந்தையிடமிருந்து புறப்படுகின்றார். இப்வெளிப்பாடு மனிதப் பாணியில் தந்தை மகனுக்குப் பெற்றோர் ஆவதிலிருந்து வேறுபட்டது. அதே நேரத்தில் இயேசு கடவுளைச் சார்ந்து இருக்கின்றார் எனவும் கடவுளுக்கு நிகராக உள்ளார் எனவும் கிறிஸ்தவர் நம்புகின்றனர். ""தந்தைக்குரிய செயல்கள்"" என இயேசு எதைக் குறிப்பிடுகிறார்? தந்தை கடவுள் தம் மகன் வழியாகத் தம்மையே நமக்கு வெளிப்படுத்துகிறார். இயேசுவின் சொல், செயல், பணி எல்லாமே தந்தையை நமக்கு அறிவிக்கின்ற விதத்தில் அமைகின்றன. ஆக, இயேசுவைக் காண்போர் தந்தையைக் காண்கின்றனர் (காண்க: ""என்னைக் காண்பவரும் என்னை அனுப்பியவரையே காண்கிறார்"" - யோவா: 12:45). இயேசுவிடம் கடவுளின் செயல் துலங்குகிறது என்பதைப் பலர் ஏற்க மறுத்தனர். அந்நிலையில் இயேசு தம் எதிரிகளைப் பார்த்து, தம் செயல்கள் எதைக் குறிக்கின்றன என்று அறிவதற்கு அவர்கள் திறந்த மனம் உள்ளவர்களாக இருக்கவேண்டும் எனக் கேட்கிறார். இயேசுவின் செயல்கள் மக்களுக்கு நன்மை பயப்பதற்காகவே செய்யப்பட்டன. அவர் ஆற்றிய புதுமைகள் மக்களுக்கு நலம் அளிக்கவும், அவர்களது பசியைப் போக்கவும், துயரத்தை அகற்றி மகிழ்ச்சி ஏற்படுத்த செய்யப்பட்டன. அச்செயல்கள் வழியாகவும் இயேசுவின் போதனை வழியாகவும் மக்களுக்குக் கடவுளின் எல்லையற்ற அன்பும் இரக்கமும் வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் சிலர் இதை ஏற்க மறுத்தனர். இன்றும்கூட, நாம் இயேசுவைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் திறந்த மனத்தோடு அவரை அணுக வேண்டும். கடவுளின் அருள் நம் உள்ளத்தில் தூண்டுகின்ற நம்பிக்கை உணர்வை மழுங்கடித்துவிடாமல் நாம் திறந்த இதயத்தோடு இயேசுவிடம் சென்றால் அவரில் கடவுளின் செயல் துலங்குவதைக் கண்டுகொள்வோம்.